Registered as a News Paper · பக்கங்கள் 04 · விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM · Peoples Daily · மக்கள் தினசரி

நாதம் 04 · திருவள்ளுவர் ஆண்டு 2024 · சித்திரை 07 · [20-04-93] · செவ்வாய்க்கிழமை · ஓசை 61

Y.M.C.A

## ஆய்வுகூடப் பணியாளர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை

வடக்கு, கிழக்கு மாகாணசபையில் கல்வி அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளில் ஆய்வுகூடப் பணியாளர் வகுப்பு III, ஆய்வுகூடப் பணியாளர் வகுப்பு I, தரம் II, சுகாதாரத் தொழிலாளர், காவலாளர், பாடசாலைத் தொழிலாளர், நூல் நிலையப் பணியாளர் ஆகிய பதவிகளுக்கு நிரந்தரமாக ஆட்சேர்ப்பதற்காக வெளிவாரி விண்ணப்பதாரிகளிடம் இருந்தும் பாடசாலைகளில் கடமை புரிகின்ற சமயாசமய நிவாரண/அமைய ஊழியர்களிடமிருந்தும் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இப்பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரை 1993 - 04 - 30-ம் தேதியன்றோ, அதற்குமுன்னரோ சென்றடையத்தக்கதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். மேல் விபரங்களை [4 ஆம் பக்கம் பார்க்க]

# பொது அறிவின்றி ஏட்டுக் கல்வியால் மட்டும் வாழ்வின் முழுமையை தரிசிக்க முடியாது

## செஞ்சோலை மாணவிகள் மூவருக்குப் பரிசில்கள்

### ஒருவருக்கு தேசிய மட்டத்தில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதி நினைவாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரால் நடாத்தப்பட்ட பொது அறிவுத் தேர்வில் செஞ்சோலை மாணவிகள் மூவர் பரிசில்களைப் பெற்றுள்ளனர். தேசிய மட்டத்திலான போட்டியில் ஆண்டு - 7 இற்கான தேர்வில் சாதனை புரிந்த 1-ம் இடத்தைப் பெற்று செஞ்சோலை மாணவி சஞ்சிகா கந்தையா தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

மருதனாமடம் கோட்டத்தில் ஆண்டு - 7 இல் செஞ்சோலை மாணவிகளான தேவிகா ஐயாத்துரை முதலாம் பரிசினையும், கல்பனா நேசராசா இரண்டாம் பரிசினையும் பெற்றுள்ளனர்.

## ஆண்டு-4 மாணவனுக்கு தலைவரின் சிறப்புப் பரிசு

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சிக் கோட்ட மட்டத்தில் 7ஆம் ஆண்டில் முதலாவது இடத்தைப்பெற்ற சாவகச்சேரி இந்து மகளிர் [4 ஆம் பக்கம் பார்க்க]



## தேர்வில் பங்கு பற்றிய மாணவருக்கு தலைவர் பிரபாகரன் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

''நாம் கற்கின்ற அல்லது செயற்படுகின்ற துறை என்ற வரம்பிற்குள் மட்டும் நாம் ஒதுங்கி நின்றுவிடக் கூடாது. அதுவும் ஏட்டுக்கல்வியோடு நின்றுவிட்டால் வாழ்வின் முழுமையை நாம் தரிசித்துக் கொள்ள முடியாது. முழுமையான சமூக மனிதர்களாக வாழ முடியாது. அன்றாட வாழ்விற்கும் தேவைகளுக்கும் பயன்படும் வகையில், நாட்டின் நடப்பியல்புகளையும் உலகத்தின் போக்குகளையும் புரிந்து கொள்ளும் வகையில் நாம் எமது பொது அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம். அதுவே எம்மை சமூகத்திற்கு பயனுள்ள மனிதர்களாக ஆக்கி விடுகிறது'' இவ்வாறு தியாகி அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வில் கலந்துகொண்ட மாணவர்களுக்குப் பாராட்டும், தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்தும் தெரிவித்து தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் நேற்று விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியின் முழுவிபரமும் வருமாறு:

கல்வி என்பது அறிவு சார்ந்தது.


ஒருவன் தன்னைப்பற்றியும், தனது சமூக வாழ்வு பற்றியும், தான் வாழும் உலகம்பற்றியும் அறிந்து கொள்வதற்கு கல்வி அத்தியாவசியமானது.

கல்வியறிவு ஒருவனது ஆளுமையைச் சிறப்பிக்கிறது அவனது வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது. அவனை முழு மனிதன் ஆக்கிவிடுகிறது.

இன்றைய அறிவியல் உலகம் விரைந்து, பரந்து வளர்ந்து வருகிறது. இந்த அறிவியல் அசைவியக்கத்தால் உலகத்தில் பிரமிக்கத்தக்க மாற்றங்கள்

இந்த அறிவுசார் நவயுகத்தில், வரையறுக்கப்பட்ட, துறைசார்ந்த படிப்புகள் ஒரு பரந்த உலகப் பார்வையையும் விரிந்த வாழ்வனுபவத்தையும் கொடுக்கப்போவதில்லை. எனவே, துறை சார்ந்தபள்ளி, கல்லூரிப் படிப்புகளோடு பொது அறிவுத் திறனையும் எமது இளம் பரம்பரையினர் வளர்த்துக் கொள்வது இன்றியமையாதது. இது இன்றைய காலத்தின் தேவையும்கூட.

நாம் கற்கின்ற அல்லது செயல்படுகின்ற துறை என்ற வரம்பிற்குள் மட்டும் நாம்



## "விடுதலைப் புலிகள்" ஏடு நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் 1993 - சித்திரை (குரல் 38) ஏடு நாளை வெளிவருகின்றது.

'தமிழர் இனப் பிரச்சினைக்கு பிரேமதாசா அரசின் தீர்வு என்ன?' என்ற தலைப்புச் செய்தியையும், 'புலிகளின் குரல்' பகுதியில், தமிழர் தேசிய இனப் பிரச்சினையும், சிங்கள அரசின் இராணுவத் திமிரும் என்ற கருத்துரையையும் கொண்டுள்ள இந்த இதழில்,

'கசியும்தகவல்கள்', 'கொதிநிலையில் இந்திய சாம்ராச்சியம்', 'கிளாலி கடக்க அனுமதியில்லை: இந்திய அரசின் நோக்கம் என்ன?', 'மாகாண சபைத் தேர்தல்கள்' என்ற தலைப்புகளிலான கட்டுரைகளுடன், மேஜர் ஜொனி என்ற போராளியின் குருதிச் சுவடும் மேலும் பல அம்சங்களும் உள்ளடங்கியுள்ளன.

## மன்னார் மாவட்டத்தில்

ஆண்டு - 7 இற்கான தேர்வில் சாதனை புரிந்த

நேசராசா இரண்டாம் பரிசினையும் பெற்றுள்ளனர்.

## ஆண்டு-4 மாணவனுக்கு தலைவரின் சிறப்புப் பரிசு

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சிக் கோட்ட மட்டத்தில் 7ஆம் ஆண்டில் முதலாவது இடத்தைப்பெற்ற சாவகச்சேரி இந்து மகளிர்

[4 ஆம் பக்கம் பார்க்க]



அன்னை பூபதி நினைவாக நடாத்தப்பட்ட 'பொது அறிவுத்' தேர்வில் தென்மராட்சிக் கோட்டமட்டத்தில் ஆண்டு 7 இல் முதலாம் இடத்தைப் பெற்ற சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி ஆண்டு 4 மாணவன் செல்வன் வி. கோகுலனுக்குத் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் சிறப்புப் பரிசினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் வழங்குவதையும், அருகில் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. இன்பன் ஆகியோரையும் காணலாம்.



மருதனார்மடம் கோட்டத்தில் ஆண்டு 7 இல் முதலாம் இடத்தைப் பெற்ற செஞ்சோலை மகளிர் பாடசாலை மாணவி தேவிகா ஐயாத்துரை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச் செல்வனிடமிருந்து பரிசினைப் பெற்றுக் கொள்வதனையும், அருகில் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரனையும் காணலாம்.

பொது அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம். அதுவே எம்மை சமூகத்திற்கு பயனுள்ள மனிதர்களாக ஆக்கி விடுகிறது" இவ்வாறு தியாகி அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வில் கலந்துகொண்ட மாணவர்களுக்குப் பாராட்டும், தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்தும் தெரிவித்து தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் நேற்று விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியின் முழுவிபரமும் வருமாறு:

கல்வி என்பது அறிவு சார்ந்தது.

ஒருவன் தன்னைப்பற்றியும், தனது சமூக வாழ்வு பற்றியும், தான் வாழும் உலகம்பற்றியும் அறிந்து கொள்வதற்கு கல்வி அத்தியாவசியமானது.

கல்வியறிவு ஒருவனது ஆளுமையைச் சிறப்பிக்கிறது அவனது வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது. அவனை முழு மனிதன் ஆக்கிவிடுகிறது.

இன்றைய அறிவியல் உலகம் விரைந்து, பரந்து வளர்ந்து வருகிறது. இந்த அறிவியல் அசைவியக்கத்தால் உலகத்தில் பிரமிக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மனித வாழ்வும் புரட்சிகரமாக மாறி வருகிறது.

இந்த அறிவுசார் நவயுகத்தில், வரையறுக்கப்பட்ட, துறைசார்ந்த படிப்புகள் ஒரு பரந்த உலகப் பார்வையையும் விரிந்த வாழ்வனுபவத்தையும் கொடுக்கப்போவதில்லை. எனவே, துறை சார்ந்தபள்ளி, கல்லூரிப் படிப்புகளோடு பொது அறிவுத் திறனையும் எமது இளம் பரம்பரையினர் வளர்த்துக் கொள்வது இன்றியமையாதது. இது இன்றைய காலத்தின் தேவையும்கூட.

நாம் கற்கின்ற அல்லது செயல்படுகின்ற துறை என்ற வரம்பிற்குள் மட்டும் நாம் ஒதுங்கி நின்றுவிடக்கூடாது. அதுவும் ஏட்டுக் கல்வியோடு

( 4 ஆம் பக்கம் பார்க்க )

அன்னை பூபதி நினைவு பொது அறிவுப் போட்டி

## சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவருக்கு கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதியின் நினைவாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டிகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றமாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நேறறு உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கத்தில் சிறப்புற நடைபெற்றது.

இந் நிகழ்வில் தேசிய மட்ட, கோட்ட மட்டங்களில்சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கபபட்டன. தமிழீழ தேசியத் தலைவர்திரு.வே பரபாகரனின் ஆசிச்செய்திவாசிக்கப்பட்டதுடன் அவரது சிறப்புப் பரிசிலும் வழங்கப்பட்டது.

நேற்றுக் காலை உரும்பராயில் சிவகுமாரன் ஞாபக தூபி முன்றலில் இருந்து விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினரின் பான்ட் இசையுடன் அனைவரும் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு தமிழீழ தேசிய கொடி ஏற்றலுடன் விழா ஆரம்பமாகியது

இவ்விழாவில் தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப்புலிகளின் கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரனும், மங்கள விளக்கை யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் திரு. சண்முகநாத பிள்ளை ஆகியோரும் அன்னை பூபதி ஞாபகார்த்த ஒளியை கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. மகேந்திரம் அவர்களும் ஏற்றிவைத்தனர்.

விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர்

( 4 ஆம் பக்கம் பார்க்க )



## "விடுதலைப் புலிகள்" ஏடு நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் 1993 - சித்திரை (குரல் 38) ஏடு நாளை வெளிவருகின்றது.

'தமிழர் இனப் பிரச்சினைக்கு பிரேமதாசா அரசின் தீர்வு என்ன?' என்ற தலைப்புச் செய்தியையும், 'புலிகளின் குரல்' பகுதியில், தமிழர் தேசிய இனப் பிரச்சினையும், சிங்கள அரசின் இராணுவத் திமிரும் என்ற கருத்துரையையும் கொண்டுள்ள இந்த இதழில்,

'கசியும்தகவல்கள்', 'கொதிநிலையில் இந்திய சாம்ராச்சியம்', 'கிளாலி கடக்க அனுமதியில்லை: இந்திய அரசின் நோக்கம் என்ன?', 'மாகாண சபைத் தேர்தல்கள்' என்ற தலைப்புகளிலான கட்டுரைகளுடன், மேஜர் ஜொனி என்ற போராளியின் குருதிச் சுவடும் மேலும் பல அம்சங்களும் உள்ளடங்கியுள்ளன.

## மன்னார் மாவட்டத்தில் புக்காரா அகோர தாக்கு

### 30 நிமிடத்தில் 8 குண்டுகள் வீசப்பட்டன

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரு 'புக்காரா' விமானங்கள் பலத்த தாக்குதலை நடாத்தியுள்ளன.

காலையில் அப்பகுதிக்கு வந்த இந்த விமானங்கள் மூன்று இடங்களில் மொத்தம் எட்டுக் குண்டுகளை வீசியுள்ளன.

காலை 6. 15 மணியளவில் முருங்கன் பகுதியில் இரண்டு புக்காரா விமானங்கள் மூன்று குண்டுகளை வீசின. மேலும் பெரிய பண்டிவீரிச்சான் காட்டுப் பகுதியில் நான்கு குண்டுகள் வீசபபட்டுள்ளன.

இதேவேளை காலை 6. 45 மணியளவில் கட்டையடம்பன் காட்டுப் பகுதியில் ஒரு புக்காரா விமானம் ஒரு குண்டை வீசியுள்ளது.

இத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரம் தெரிய வரவில்லை.

## கடற்படைத் தாக்குதலில் மீனவர் படுகாயம்

(வடமராட்சி)

கடல்தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் ஒரு மீனவர் காலில் படுகாயமடைந்தார். மற்றும் இரண்டு மீனவர்கள் கடற்படையினரின் பலத்த தாக்குதலுக்கு இலக்காகினர்.

இத்தாக்குதல் சம்பவம் பருத்தித்துறை முனை கடற்பகுதியில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் நடைபெற்றது.

இது பற்றி மேலும் தெரியவருகையில், முனைப் பகுதிக் கடலில் ஒரு படகில் சென்ற மூன்று மீனவர்கள் தொழிலில்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# அன்னை பூபதி நினைவு நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய ஆக்கிரமிப்புப்படைகளுக்கெதிராக அகிம்சைப் போர் தொடுத்த தியாகி அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாட்களின் இறுதிநாளான நேற்று தமிழீழம் எங்கும் உணர்வு பூர்வமான அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

குடாநாட்டின்தென்மராட்சி வடமராட்சி,வலிகாமம் ஆகிய ஒவ்வொரு பகுதிகளிலும் தியாகி அன்னை பூபதிக்கு அஞ்சலிசெலுத்தும் முகமாக அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும், நினைவஞ்சலிக் கூட்டங்களும் நடைபெற்றன.

வலிகாமம், தீவகக்கோட்ட அன்னைபூபதியின் 5-ம்ஆண்டு நினைவுநாள்நிகழ்வுகள் நேற்று யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

பெருமளவு ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், வயோதிபர்களும் இவ் இறுதி நாள் உண்ணாவிரத நிகழ்வில் கலந்துகொண்டனர். காலை 7 மணிக்கு ஆரம்பமான உண்ணாவிரத நிகழ்வு மாலை 5 மணிவரை இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து இரவு 7.45 மணிக்கு நினைவுரைகளும், கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தைச் சூழவுள்ள அனைத்துப் பிரதான வீதிகளும் வர்ணவிளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்ததுடன் மைதானம்முழுவதும் மஞ்சள் சிவப்பு கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. சந்திகள் தோறும் அலங்கரிக்கப்பட்ட நினைவுவளைவுகள் அமைக்கப் பட்டிருந்தன. வீதிகளின் குறுக்கே அன்னைபூபதியின் நினைவாக எழுச்சியூட்டும் கோஷங்களைத் தாங்கிய பதாகைகள் பல கட்டப்பட்டிருந்தன

தியாகி அன்னை பூபதியின் 5 ஆம் ஆண்டின் இறுதிநாள் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்களான யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. ஜவான், யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்

## சங்கீதம் வினா-விடை

O/L பரீட்சைக்கும், வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்கும் பயன்படும் சங்கீத வினாவிடை விற்பனையாகிறது ஆக்கம்: ''அநேகா'' ஸ்ரீசுப்பிரமணியபுத்தகசாலை, யாழ்ப்பாணம். (4700)

## ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)

## உங்களை அழைக்கின்றது

யோ. எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை. மதியஉணவுப்பார்சல்கள் பகல் 11-30 மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. (சி-6357)

## சத்யா ஜோதிட விஞ்ஞானம்

புத்தாண்டு இராசிகளின் பலன்களும் கைரேகை சாஸ்திரமும்- ரூ 8 50 எங்கும்விற்பனையாகின்றது. கனகா ரேடர்ஸ் திருநெல்வேலி. ஜாதகங்களின் கணிப்புகளுக்கும் ஆலோசனைகளுக்கும் நேரிலே சந்திக்கலாம் [சத்தியதாஸன் இடிகுண்டருகாமை] கட்டுடை. [4726]

## சென்றலைட்ஸ் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகம் நடாத்திய 6 பேர் கொண்ட 5 ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சென்றலைட்ஸ் 'ஏ'' அணி சாம்பியனாகியது

இறுதிப்போட்டியில் கொக்குவில் சீ சீ சி அணியை 6 ஓட்டங்களால் சென்றலைட்ஸ் அணி வெற்றியீட்டியது.

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 5 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 64 ஓட்டங்களை பெற்றது.

கொக்குவில் மிகவும் சிறப்பாக விளையாடிய போதிலும் 4.5 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 58 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

## வெண்கட்டி விநியோகம் நடவடிக்கை எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

அடுத்த தவணை ஆரம்பிக்கும் போது குடாநாட்டில் உள்ள சகல பாடசாலைகளுக்குமுரிய ''வெண்கட்டிகளை'' கல்வித்திணைக்களம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறதாக கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

வெண்கட்டிக்கு குடாநாட்டில் ஏற்பட்ட தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு கொழும்பில் இருந்து குமண மூலம் கொண்டு வரப்பட்ட வெண்கட்டிகளே வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். (05)

## பதிவு செய்து கொள்ளுங்கள்

ஏகோபித்த வாடிக்கையாளர்கள் வருகையால் உங்கள் உணவுப் பார்சலுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி. [சி 6438]

## களை ஆரம்பம்

எமது அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது சேவையை எம்மக்களுக்கு விரிவு படுத்தும் நோக்குடனும் அதன் முதற் கட்டமாக

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா

தனது சேவையை கந்தர்மடம், அரசடிவீதி அங்கர் பார்மஸியில் விற்பனைப் பிரிவை

18-4-1993

பகல் 12-00 மணிக்கு ஆரம்பித்துள்ளது.

எமது சுவைமிகு தரமான உணவுப் பார்சல்களை பகல் 11-30 மணிமுதல் வழங்குகின்றது. யல்கலைக்கழக மாணவர்கள், மற்றும்கந்தர்மடம், திருநெல்வேலி இந்துக் கல்லூரி மற்றும் அதைச் சார்ந்துள்ள பிரதேச மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

| | | |
|---|---|---|
| மீன் | - | 29-50 |
| இறைச்சி | - | 29-50 |
| மரக்கறி | - | 24-50 |

அத்துடன் எவ்வகையான ஓடர்களையும் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. சுண்டுக்குளி. (சி-6446)

## உதைபந்தாட்டம்

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் அரையிறுதி ஆட்டம் இன்று செவ்வாய் பிற்பகல் 4 மணிக்கு நாவாந்துறை கலைவாணி மைதானத்தில் நடைபெறும். இதில் இளவாலை யங்கென்றியின் வி.கவை எதிர்த்து அளவெட்டி விநாயகர் வி. க. மோதும்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

தாயின் மடியில் 01 — 03 — 1948



தாயக மண்ணில் 22 — 03 — 1993

திருமதி

**கந்தசாமி நாகேஸ்வரியம்மா**

[திரவியம்]

(காங்கேசன் சூல்ஸ்பொட் உரிமையாளர்)

பண்ின் சிரகமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
வாழ்ந்துவிட்ட எம்இனிய அம்மாவே
கல்விச் செல்வத்துடன் பாரினில் நல்வாழ்வுக்-எமை
வாழ வைத்துவிட்டு விண்ணகம் நீர் சென்றதேனோ

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், தற்போது மருதனார்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய காலம்சென்ற திருமதி கந்தசாமி நாகேஸ்வரியம்மா (திரவியம்) அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், 21-04-1993 புதன்கிழமையன்று நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
கந்தசாமி குடும்பத்தினர்
(ரவி)

பெற்றோல் செற் முன்பாக,
மருதனார்மடம். (4728)

## சேவை

சகலவிதமான உணவு வகைகளுக்கு ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். வெளிநாட்டில் பயிற்சி பெற்ற உணவு வல்லுநர்களின் ஆலோசனைக்கேற்ப உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். உண்மை புலப்படும்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி-6439)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 21. 7. 1968

தாயக மண்ணில் 20. 4. 1989

**லெப். இன்பம்**

[இராசையா ஜெகசீலகிருஷ்ணன்]

எங்கள் அன்புச் செல்வமே ஜெகசீல கிருஷ்ணா!
எங்கள் வீரச் செல்வனே - ஜெகசீலனே
உன்னழகு முகம் தினம்தினம்எம்முன் தெரியுதடா-சீலா
அம்மாவை காணவந்தாய் அன்பாக ஒரு நாள் - சீலா
அருகில் வந்து கொடுத்தாய் ஓர் முத்தம்
அப்போது தெரியவில்லை கடைசி தான் என்று
கடைசியாகப் பிறந்தாய் நீ எமக்கு - சீலா
இருபத்தொரு வயதினிலும் உன்பால் வடியும்
முகம் பார்த்தால் பசிதீருமடா - சீலா
இன்பம் என்னும் பெயருடனே
இனிய தமிழ் மண்ணுக்காய் புறப்பட்ட வேளையில்
இன்னுயிரை அர்ப்பணித்த - வீரனே
உன் கொள்கை நிறைவேறுமடா
ஆறுமோ எங்கள் உள்ளம்
எங்கள் உள்ளத்தில் என்றும்
ஒளிவீசும் உன்னழகு.

உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 10, இன்பம் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். -குடும்பத்தினர். (4712)

## நினைவு கூருகின்றோம்... 1993-04-20

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -


எம்மண்ணின் தித்திக்கும் தயாரிப்புக்கள்! சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவராலும் விரும்பிப் பருகும் பானங்கள்

தாகம் தணிந்திட, தரமான சுத்தமான, காற்றூட்டப்பட்ட மென்பானங்கள்

குடா நாட்டின் அனைத்து வர்த்தக நிலையங்களிலும் அமோக ஆதரவுடன் விற்பனையாகின்றன

புத்தூக்கி - மென்பானங்கள்

புத்தூக்கி REFRESHER

நடவடிக்கை எடுத்து வருகிற
தாக கல்விப் பணிப்பாளர்
இரா. சுந்தரலிங்கம் தெரிவித்

வெண்கட்டிகளே வழங்கப்பட
வுள்ளதாகத் தெரிவித்தார். (05)

அல்லூரி முன் ஒழுங்கை.
சுண்டுக்குளி. (சி-6446)

பெற்றோல் செற் முன்பாக, (ரவி)
மருதனார்மடம். (4728)

உன் கொள்கை நிறைவேறுமடா
ஆறுமோ எங்கள் உள்ளம்
எங்கள் உள்ளத்தில் என்றும்
ஒளிவீசும் உன்னழகு.

உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 10, இன்பம் வீதி, -குடும்பத்தினர்.
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம். (4712)

எம்மண்ணின் தித்திக்கும் தயாரிப்புக்கள்! சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவராலும் விரும்பிப் பருகும் பானங்கள்

தாகம் தணிந்திட, தரமான சுத்தமான, காற்றூட்டப்பட்ட மென்பானங்கள்

குடா நாட்டின் அனைத்து வர்த்தக நிலையங்களிலும் அமோக ஆதரவுடன் விற்பனையாகின்றன

## புத்தூக்கி - மென்பானங்கள்

# புத்தூக்கி REFRESHER

**[காற்றூட்டப்பட்டது - AERATED]**

விரும்பும் பல்வேறு வகைகளில் - அளவுகளில்

★ கோப் கோலா ★ ஒரேஞ் பார்லி ★ கிறீம் சோடா ★ நெக்ரோ
★ லெமனட் ★ இஞ்சிச் சோடா ★ மென் சோடா

மற்றும் எமது உன்னத தயாரிப்புக்கள்

❋ சொக்கா - CHOCA சொக்லட் ❋ கூல்மன்ஸ் [உடன் பழச்சாறு]
❋ ஸ்ரோபெறி ஜாம் ❋ பைன்அப்பிள் ஜாம் ❋ வூட்அப்பிள் ஜாம்
❋ ஜப்-பிக்ஸ்கம்-JAF-FIXGUM (அன்னாசி)

**தயாரித்து வழங்குபவர்கள்:- யாழ். பகுதி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி** (மட்டு.)

| புத்தூக்கி மென்பான வகைகள் விநியோகஸ்தர் | மென்பான வகைகள் | விநியோகஸ்தர் விலை | சில்லறை விற்பனவு விலை |
|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம்/நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு | 300 மி.லீ கோப் (கோலா) இஞ்சிச்சோடா ) | 10-50 | 12-00 |
| "இனிமை" மென்பான விநியோகஸ்தர் யாழ்ப்பாணம் | 300 மி.லீ. இதர வகைகள் | 10-00 | 11-50 |
| | 400 மி.லீ இஞ்சிச்சோடா | 12-50 | 14-00 |
| | 400 மி.லீ. இதர வகைகள் | 12-00 | 13-50 |
| 2 தென்மராட்சி பகுதி "சுவையகம்" மென்பான விநியோகஸ்தர் சாவகச்சேரி | 300 மி.லீ கோப் (கோலா) இஞ்சிச்சோடா ) | 11-00 | 12-50 |
| | 300 மி லீ இதர வகைகள் | 10-50 | 12-00 |
| | 400 மி.லீ.இஞ்சிச்சோடா | 13-00 | 14-50 |
| | 400 மி.லீ. இதர வகைகள் | 12-50 | 14-00 |
| 3. வலிகாமம் பகுதி/வடமராட்சிப் பகுதி துஷிக்கா/அபர்ணா மென்பான விநியோகஸ்தர் கொக்குவில் | 300 மி லீ கோப் (கோலா) இஞ்சிச்சோடா ) | 11-00 | 12-50 |
| | 300 மி.லீ இதர வகைகள் | 10 50 | 12-00 |
| | 400 மி லீ இஞ்சிச்சோடா | 13-00 | 14-50 |
| | 400 மி.லீ இதர வகைகள் | 12-50 | 14-00 |

[விளம்பர அமைப்பு:- (V. K. J) (சி-6463)

## நினைவு கூருகின்றோம்... 1993-04-20

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். ஜெயம்/ரமணன் (இராசசேகரம் பிறேமச்சந்திரன் - ஊறணி, வல்வெட்டித்துறை - யாழ்.)

லெப். கந்தன்/ரவி (அருட்பிரகாசம் எட்மன் சத்தியசீலன்-தேவமாதா கோவிலடி, தும்பளை, பருத்தித்துறை - யாழ்.)

1988 ஆம் ஆண்டு யாழ்-தொண்டமானாறு-கெருடாவில் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

கப்டன் ரகீம் (சிவானந்தஐயர் செல்வராசா -செல்வச்சந்நிதிக்கோயிலடி, தொண்டமானாறு)

1989 ஆம் ஆண்டு மணலாற்றில் கிணறு வெட்டும் பணியின் போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த

கிளாஸ் நிக்கோ (கதிரமலை காந்தன் - கல்குடா - மட்டு.)

யாழ் - சுழிபுரத்தில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

லெப். இன்பம் (இராசையா ஜெகசீல கிருஷ்ணன் - இல 10, இன்பம் வீதி. வண்ணார்பண்ணை - யாழ்.)

இதே சம்பவத்தில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

கபில் (வேலும்மயிலும் சிவகுமார் - சிவன்கோவிலடி, வட்டுக்கோட்டை - யாழ்)

நெல்சன் (பர்ணபாலா நேபேட் ஜோர்ஜ் - 9-ம் வட்டாரம், நெடுந்தீவு யாழ்)

1991 ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

திலக் (அழகையா ஜெயபாலு -வந்தாறுமூலை-மட்டு.)

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

யூசி (பங்குராஸ் பீற்றர் - செம்மண்தீவு, முருங்கன் - மன்னார்)

1992 ஆம் ஆண்டு மட்டு - சுங்கன்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவக் காவல்துறையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

2-ம் லெப். ஜெகதாஸ் (நவரத்தினம் சுந்தர்ராஜன் - தம்பிலுவில் -01 - அம்பாறை)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது கடற்படையினரின் வெறியாட்டத்தில் கொல்லப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த 02 பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி]6465]

சிந்தனைக்கு

மழைபெய்தது என் சாதனை என வாதிடும் ஒரு கட்சி, வறட்சிக்கும் அதுதான் பொறுப்பு என எதிரிகள் பழிக்கும்போது வியப்படையக்கூடாது.

— டுவைட் மாரோ.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839, நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## தேர்தல் ஜனநாயகம்

சிறிலங்கா ஜனநாயக நாடு எனத் தன்னைத் தானே கூறிக்கொள்வதற்குக் கடந்தகாலத்தில் ஓரளவு காலக்கிரமத்தில் நடத்தப்பட்ட தேர்தல்களையே பெருமையாகக் கூறிக்கொள்வதுண்டு. ஆனால், இத்தேர்தல்களில் கடந்த தசாப்தங்களில் ஆரம்பித்த மோசடிகள் இத் தேர்தல்களை வைத்து இனிமேலும் சிறிலங்காவால் ஜனநாயக நாடு என பெருமை பேச முடியுமா? என்ற கேள்வியையே ஏற்படுத்தியுள்ளது.

இதை வெளிப்படுத்துமாப்போலவே மே 17 இல் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலிலும் மோசடிகளும், வன்முறையும் இடம் பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் தற்பொழுதே தெரிய ஆரம்பித்துள்ளன. எதிர்க்கட்சியினர் தாக்கப்படுதல், கடத்தப்படுதல், கூட்டங்கள் குழப்பப்படுதல் போன்ற பல பலாத்கார நடவடிக்கைகளில் அரசாங்கக் கட்சி ஈடுபடுவதாகவும், அதற்குப் பொலிஸாரும் ஒத்துழைத்து வருவதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளன.

முக்கியமாக லலித் - காமினி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் மீதே ஐ. தே. கட்சி தனது கவனத்தை திருப்பியுள்ளதாகத் தெரியவருகின்றது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் தில்லு முல்லுகளை ஏனையோரைவிட லலித் - காமினி குழுவினர் அறிந்திருப்பது காரணமாக இருக்கலாம் அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட ஜ. ஐ. தே. முன்னணியையே முக்கிய எதிரியாக பிரேமதாசா அரசு கருதியிருக்கலாம்.

மூன்றாம் உலக நாடுகளின் ஜனநாயகப் பாரம்பரியத்தில் பொதுவாக அரச வளங்களும் ஆயுதப் படையினரும் (பொலிசும் உட்பட) தேர்தல் காலங்களின் போது அரசாங்கக் கட்சியின் ஓர் அங்கமாகச் செயற்படுவது ஒரு வழமையான நடவடிக்கை என்றே கூறலாம். இது தனியாக பிரேமதாசா அரசாங்கத்திற்கு மட்டும் உரித்தான தனிப் பண்பல்ல. ஆயினும், ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே முன்னரைவிட பன் மடங்கு வீங்கிப் பெருத்துப் போயுள்ள ஆயுதப் படையினர் பிரேமதாசாவின் ஆட்சிக்கு முட்டுக் கொடுக்க முற்படுவதில் ஆச்சரியமொன்றுமில்லை. அதற்காக படுகொலைகள் புரியும் வரை செல்லக்கூடிய கடந்தகால அனுபவம் அவர்களுக்கு

# தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுக்கான நடைமுறைகள் - 1993

21.04.93 இலிருந்து சகல மோட்டார் ஊர்தி பதிவுகளும் ஆரம்பிக்கப்படுகின்றன. முதற்கட்டமாக யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஊர்தி உரிமையாளர்களினது பதிவு மேற்கொள்ளப் படவுள்ளது. பதிவு மேற்கொள்ளப்படுவோரை சிறிலங்கா பதிவுப் புத்தகம் அல்லது இறக்குமதிச் சிட்டையுடன் குடும்ப பதிவு அட்டையையும் நேரில் எடுத்துவரும்படி மோட்டார் ஊர்தி பதிவுப் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றனர். இது குறித்த விபரங்களை இங்கு தருகின்றோம்.

பிரிவு 01

### மோட்டார் ஊர்தி பதிவு செய்தல்

அ) தமிழீழத்தில் எமது கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிரதேசத்தில் எவரேனும் தமிழீழ மோட்டார் பதிவாளர் காரியாலயத்திற் பதிவு செய்யாமல் ஊர்தி ஒன்றினை வைத்திருப்பது அல்லது பாவிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆ) மோட்டார் ஊர்தி என்பது மோட்டார்இணைக்கப்பட்ட ஊர்திகளுடன் (ரெயிலரும்) பெட்டியும் உள்ளடங்கும்.

இ) யாருடைய அல்லது எவருடைய பெயரில் ஒரு மோட்டார் ஊர்தி பதிவுக்குட்படுத்தப்படுகின்றதோ அவரே குறித்த காலப்பகுதியில் அவ் ஊர்தியின் உரிமையாளரென இப்பதிவின் மூலம் விதந்துரைக்கப்படுகின்றது.

பிரிவு 02

### குறித்த தேவைகளைப் பூர்த்தி செய்யாத மோட்டார் ஊர்திகள் பதிவு செய்யப்படமாட்டாது

அ) இந்நடைமுறையில் விதந்துரைக்கப்பட்டவாறு மோட்டார் ஊர்தி என்று அடையாளங் காணக்கூடிய முறையில் அமைப்பு, நிறை, அளவு தேவையான உபகரணங்களைக் கொண்டிராத ஊர்திகள் எதையும் மோட்டார் ஊர்திஎன்று பதிவுக்குட்படுத்த முடியாது.

[மோட்டார் ஊர்திப்பதிவாளரால் நியமிக்கப்பட்ட மோட்டார் ஊர்திப் பரிசோதகர் மூலம், ஊர்தி பரிசோதனைக்குட்படுத்தப்படும்.]

ஆ) இரண்டரை மெற்றிக் தொன் எடைக்கு மேற்பட்ட மோட்டார் ஊர்திகள் எதையும் மோட்டார் கார் என்று பதிவு செய்ய முடியாது.

பிரிவு 03

### ஊர்திப் பதிவுக்குத் தேவையான சான்றிதழ்கள்

அ) மோட்டார் ஊர்தி ஒன்றினைப் பதிவு செய்வதற்கு அதற்கென

கத்தினால் வழங்கப்பட்ட ஊர்திக்கான பதிவுச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இ) மேற்குறிப்பிட்ட சான்றிதழ்களோ அல்லது அத்தாட்சிப்படுத்தக் கூடிய ஏனைய ஆவணங்களோ இல்லாதவிடத்து மே. ஊ. படிவம் 02இல் கேட்கப்பட்ட ஆவணங்களுடன் பூர்த்தி செய்து பதிவுக்குட்படுத்தலாம். மோட்டார் ஊர்திப் படிவம் 02-ன் மூலம் பதிவு செய்யப்படும் ஊர்திகளுக்குத் தற்காலிகப் பதிவுப்புத்தகமான சிவப்புப் புத்தகம் வழங்கப்படும்.

ஈ) ஊர்திகளின் விற்பனையையோ, கைமாற்றுகலையோ, சிவப்புப்புத்தகம் எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. ஆயினும் ஊர்தியைப் பொறுப்பேற்பவர் ஊர்திக்குச் சரியான சான்றிதழ்கள்

இல்லாத நிலையைத் தெரிந்து கொள்ளும் பொருட்டே சிவப்புப் புத்தகம் வழங்கப்படுகிறது.

பிரிவு 04

### ஆண்டு வரி அனுமதிப் பத்திரம்

அ) தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவாளர் காரியாலயத்தினால் வரையறுக்கப்பட்ட ஆண்டு வரி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாத ஊர்திகள் எதையும் (மக்கள் நடமாடும்) தெரு வீதிகளில் பாவிப்பது அல்லது செலுத்திச் செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என

படிவத்தின்மூலம் அறிவிக்க வேண்டும். அப்படிச் செய்யத்தவறும் பட்சத்தில் அவ்விண்ணப்பத்திற்குரிய அனுமதிப் பத்திரத்திற்கான கட்டணத்தினைச் செலுத்த வேண்டுமென இந்நடைமுறைமூலம்விதந்துரைக்கப்படுகின்றது.

பிரிவு 05

### இயந்திரம் / அடிச்சட்டம் பதிவுக்குட்படுத்தல் / மோட்டார் ஊர்தியை அழித்தல்

அ) மோட்டார் ஊர்தியின் இயந்திரமோ அல்லது அடிச்சட்டமோ வைத்திருக்கும் எவரேனும் பிரிவு 01-ல் கூறப்பட்டவாறு நடைமுறைகளைப்பேணிப் பதிவுக்குட்படுத்தவேண்டும் பதிவுக்குட்படுத்தாவிடின் தண்டனைக்குரிய குற்றமாகும் என விதந்துரைக்கப்படுகிறது.

ஆ) ஒரு மோட்டார் ஊர்தி அல்லது, அடிச்சட்டம் இயந்திரம் போன்றவற்றை அழிப்பதாயின் அல்லது பதிவுகளை நீக்குவதாயின் மோட்டார்ப் பதிவாளர் காரியாலயத்திலுள்ளவிண்ணப்பப்படிவத்தை உரிமையாளர் பூர்த்திசெய்வதன் மூலம் ஊர்திப்பதிவாளருக்கு அறியத்தரவேண்டும்.

பிரிவு 6

### அரச, அரச கூட்டுத்தாபனம், பொது அமைப்புக்களின் மோட்டார் ஊர்திகளைப்

பொது அமைப்புக்களின் தேவைகளுக்கு மட்டும் பாவிக்கப்படும் ஊர்திகளை எக்காரணங்கொண்டும் அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களின் தலைவர் அல்லது எவரேனும் ஒருவரது பெயரில் பதிவு செய்ய முடியாது. அவ்வாறுபதிவுசெய்வதுதண்டனைக்குரிய குற்றமாகும்.

இ) அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களின் மோட்டார் ஊர்திகள் அனைத்தும் அந்தந்த அமைப்புக்களின் பெயர்களிலேயே பதிவுக்குட்படுத்தப்படும். பொறுப்புவாய்ந்த அல்லது அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினர்கள் அல்லது அதிகாரிகள் இருவர் தமிழீழ மோட்டார் ஊர்தியின் பதிவுப்படிவத்தில் கையொப்பமிட்டு உறுதிப்படுத்திப் பதிவுக்குட்படுத்த வேண்டும்.

பிரிவு 07

### அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களினால் தனிப்பட்டவருக்கு வழங்கப்பட்ட மோட்டார் ஊர்திகள்

அ) அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புகளில் வேலை செய்பவர்களுக்கு வேலைகளைத் துரிதமாக முடிப்பதற்காக அல்லது பிற காரணங்களுக்காக, அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களினால் கொள்வனவு செய்து கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட அல்லது நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட மோட்டார் ஊர்திகளை நபரொருவரின் பெயரிலோ அல்லது எவரேனும் ஒருவரின் பெயரிலோ பதிவுக்குட்படுத்துவதாயின் உரியதிணைக்களம் அல்லது பொது நிறுவனத் தலைமை அதிகாரி மூலம் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் கொண்டு வரப்

பிரிவு 08

### நடைமுறைப்படுத்துதல்

அ) ஒரு மோட்டார் ஊர்தி இயந்திரம் அடிச்சட்டம் போன்றன தொலைந்தால் அல்லது களவு போனால் உடன் தமிழீழக் காவற்துறையினருக்கு அறிவிக்கவேண்டும் அப்படிச்செய்யாவிடின் அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆ) மோட்டார் ஊர்திப் பதிவாளரினால் வகுக்கப்பட்ட நடைமுறைச் சட்டதிட்டங்களை மீறுபவர்கள் மீது பதிவாளரினால் வகுக்கப்பட்ட நடைமுறைகளுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் தமிழீழ காவற்றுறையினருக்கு அல்லது ஊர்திப் பதிவாளரினால் அதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு உண்டென்பதை இந் நடைமுறையால் விதந்துரைக்கப்படுகின்றது.

### மோட்டார் ஊர்தியின் பதிவுப் படிவங்கள்

1) மோட்டார் ஊர்திக்கான உறுதிச்சான்றிதழ் - இருப்பின் தமிழீழ பதிவுப்படிவம் (மோ ஊ. 01)
2) மோட்டார் ஊர்திக்கான உறுதிச்சான்றிதழ் இல்லாவிடின் தமிழீழ பதிவுப்படிவம் (மோ. ஊ. 02)
3) மோட்டார் ஊர்தி உரிமையாளர் மரணம் பற்றிய அறிவித்தற் படிவம் (மோ.ஊ. 03)
4) மோட்டார் ஊர்தி பதிவுப் புத்தகத்தின் நகலுக்கான விண்ணப்பப் படிவம் (மோ.ஊ. 04)
5) மோட்டார் ஊர்தி அடிச்சட்டம் அல்லது இயந்திரம் வைத்திருப்பதற்கான தமிழீழ பதிவுப் படிவம் (மோ. ஊ. 05)
6) மோட்டார் ஊர்தி வரி விண்ணப்பப்படிவம்(மோ. ஊ. 06)
7) மோட்டார் ஊர்தி வரி அட்டை நகலுக்கான விண்ணப்பப்படிவம் (மோ. ஊ. 07)
8) மோட்டார் ஊர்தி மாற்றிக்கொடுப்பதற்கான விண்ணப்பப்படிவம்(மோ. ஊ. 08)
9) மோட்டார்ஊர்தி கொள்வனவின் பின் தமிழீழ பதிவதற்கான விண்ணப்பப் படிவம் (மோ.ஊ 09)
10) மோட்டார் ஊர்தி பதிவுகளை நீக்குவதற்கானவிண்ணப்பப்படிவம் (மோ. ஊ. 10)
11) தமிழீழ மோட்டார்

தேசியக் கட்சியின் தேர்தல் தில்லு முல்லுகளை ஏனையோரைவிட லலித் - காமினி குழுவினர் அறிந்திருப்பது காரணமாக இருக்கலாம் அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட ஐ. ஐ. தே. முன்னணியையே முக்கிய எதிரியாக பிரேமதாசா அரசு கருதியிருக்கலாம்.

மூன்றாம் உலக நாடுகளின் ஜனநாயகப் பாரம்பரியத்தில் பொதுவாக அரச வளங்களும் ஆயுதப் படையினரும் (பொலிசும் உட்பட) தேர்தல் காலங்களின் போது அரசாங்கக் கட்சியின் ஓர் அங்கமாகச் செயற்படுவது ஒரு வழமையான நடவடிக்கை என்றே கூறலாம். இது தனியாக பிரேமதாசா அரசாங்கத்திற்கு மட்டும் உரித்தான தனிப் பண்பல்ல. ஆயினும், ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே முன்னரைவிட பன்மடங்கு வீங்கிப் பெருத்துப் போயுள்ள ஆயுதப் படையினர் பிரேமதாசாவின் ஆட்சிக்கு முட்டுக் கொடுக்க முற்படுவதில் ஆச்சரியமொன்றுமில்லை. அதற்காக படுகொலைகள் புரியும் வரை செல்லக்கூடிய கடந்தகால அனுபவம் அவர்களுக்கு உண்டு.

ஆனால், இது குறித்து முறையீடு செய்யவும் கண்டனம் செய்யவும் லலித் - காமினி குழுவினருக்கு எந்தளவு தார்மீக பலம் உண்டு என்பதே கேள்வியாகும். ஏனெனில், கடந்த காலத்தில் ஐ. தே. கட்சி புரிந்த தேர்தல் மோசடிகளில் அக்கட்சியின் உறுப்பினர்கள் என்ற ரீதியிலும், தேர்தல் மோசடிகளில் நேரடியாக ஈடுபட்டவர்கள் என்ற ரீதியிலும், மோசடித் தேர்தலை நடத்த அனுமதித்தவர்கள் என்ற ரீதியிலும் லலித்-காமினி இருவருக்கும் நேரடிப் பங்குண்டு.

1981ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த மாவட்ட சபைத் தேர்தலின் போதே முதல் முதலாக வெளிப்படையாக அரசாங்கம் ஐ தே. கட்சி தேர்தல் மோசடியில் ஈடுபட்டது. இத்தேர்தலின் போது அரசாங்க தரப்பில் இருந்து தேர்தல் மோசடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கென்று, அமைச்சர் காமினி திசாநாயக்காவும், சிறில் மத்தியூவும் தற்போதைய கொழும்பு மாநகர பிரதி மேஜர் கணேசலிங்கமும் விசேடமாக யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டனர்.

இதன் பின்னர் படிப்படியாக ஆரம்பித்த தேர்தல் மோசடி கடந்த மாகாணசபைத் தேர்தல், பாராளுமன்ற தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் வெளிப்படையாகவே நடத்தப்பட்டது தேர்தலின் போது தனது முழுவளத்தையும் பிரயோகித்து தமது வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்குரிய சூழ்நிலையை ஐ தே. கட்சி உருவாக்கி இருந்தது. அவ்வாறு இல்லாமல் தோல்வியை சந்திக்கத் தான் வேண்டும் என்ற பகுதியில் தேர்தலையே குழப்பியடித்தது.

இதேவேளை ஒரு ஜனநாயக அமைப்பிற்கான தேர்தலை எவ்வாறு துப்பாக்கி முனையில் நடத்துவது என்ற இந்தியாவின் வழி முறையும் வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி கற்றுக் கொண்டது. இவ்வாறாக 'ஜனநாயக ரீதியான தேர்தல்' இடம்பெற்ற சகலவேளைகளிலும், லலித்தும் - காமினியும் ஐக்கிய தேசியக் கட்சியில் அமைச்சராக இருந்தனர். அவற்றிற்காக தீவிரமாக உழைத்தும் வந்தனர்.

இந்நிலையில் லலித் குழுவினர் இத்தேர்தலில் எதிர்நோக்கும் அச்சுறுத்தலானது கடந்த காலத்தில் அவர்கள் விதைத்ததற்கான அறுவடை என்றே கூறலாம். இதில் யாரை நொந்தும் பயனில்லை.

பதிவுக்குட்படுத்த முடியாது.

[மோட்டார் ஊர்திப்பதிவாளரால் நியமிக்கப்பட்ட மோட்டார் ஊர்திப் பரிசோதகர் மூலம், ஊர்தி பரிசோதனைக்குட்படுத்தப்படும்.]

ஆ) இரண்டரை மெற்றிக் தொன் எடைக்கு மேற்பட்ட மோட்டார் ஊர்திகள் எதையும் மோட்டார் கார் என்று பதிவு செய்ய முடியாது.

பிரிவு 03

**ஊர்திப் பதிவுக்குத் தேவையான சான்றிதழ்கள்**

அ) மோட்டார் ஊர்தி ஒன்றினைப் பதிவு செய்வதற்கு அதற்கென அமைக்கப்பட்ட படிவம் பூர்த்தி செய்யப்பட்டு ஊர்தி உரிமையாளர் கையொப்பமிடப்பட வேண்டும்.

ஆ) விற்பனைக்கெனப் பதிவு செய்யப்பட்ட முகவரிடமிருந்து மோட்டார் ஊர்தி கொள்வனவு செய்ததற்கான பற்றுச் சீட்டு அல்லது அத்தாட்சிப்பத்திரம் அல்லது சிறிலங்கா அரசாங்

தெரிந்து கொள்ளும் பொருட்டே சிவப்புப் புத்தகம் வழங்கப்படுகிறது.

பிரிவு 04

**ஆண்டு வரி அனுமதிப் பத்திரம்**

அ) தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவாளர் காரியாலயத்தினால் வரையறுக்கப்பட்ட ஆண்டு வரி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாத ஊர்திகள் எதையும் (மக்கள் நடமாடும்) தெரு வீதிகளில் பாவிப்பது அல்லது செலுத்திச் செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என விதந்துரைக்கப்படுகின்றது.

ஆ) பதிவு செய்யப்பட்ட ஊர்தி, உரிமையாளரினால் அடுத்துவரும் ஆண்டில் பாவிக்கமுடியாத நிலையில் இருக்குமானால் அதுபற்றி ஊர்திப் பதிவாளருக்கு நடப்பு ஆண்டில் டிசம்பர் 31-ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ குறிக்கப்பட்ட

வுக்குட்படுத்தாவிடின் தண்டனைக்குரிய குற்றமாகும் என விதந்துரைக்கப்படுகிறது.

ஆ) ஒரு மோட்டார் ஊர்தி அல்லது அடிச்சட்டம் இயந்திரம் போன்றவற்றை அழிப்பதாயின் அல்லது பதிவுகளை நீக்குவதாயின் மோட்டார்ப் பதிவாளர் காரியாலயத்திலுள்ளவிண்ணப்பப்படிவத்தை உரிமையாளர் பூர்த்திசெய்வதன் மூலம் ஊர்திப்பதிவாளருக்கு அறியத்தரவேண்டும்.

பிரிவு 6

**அரச, அரச கூட்டுத்தாபனம், பொது அமைப்புக்களின் மோட்டார் ஊர்திகளைப் பதிவுக்குட்படுத்தல்**

அ) முற்றுமுழுதாக அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களின் பெயரில் பதிவுக்குட்படுத்தப்பட்ட ஊர்திகளே அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களின் ஊர்திகள் என்று அழைக்கப்படும்.

ஆ) முற்று முழுதாக அரச, அரச கூட்டுத்தாபன,

ளைத் துரிதமாக முடிப்பதற்காக அல்லது பிற காரணங்களுக்காக, அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களினால் கொள்வனவு செய்து கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட அல்லது நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட மோட்டார் ஊர்திகளை தப்பிரொருவரின் பெயரிலோ அல்லது எவரேனும் ஒருவரின் பெயரிலோ பதிவுக்குட்படுத்துவதாயின் உரிய திணைக்களம் அல்லது பொது நிறுவனத் தலைமை அதிகாரி மூலம் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் கொண்டு வரப்பட வேண்டும்.

ஆ) அரச, அரச கூட்டுத்தாபன, பொது அமைப்புக்களினால் கடன் அடிப்படையில் ஒரு நபருக்கு வழங்கப்பட்ட மோட்டார் ஊர்தியின் கடன் செலுத்தப்படும் வரை பதிவுப் படிவத்தில் முன்னைய உரிமையுடைய அமைப்பின் பெயரே குறிப்பிடப்பட வேண்டும்.

தமிழீழ பதிவுப் படிவம் (மோ. ஊ. 05)

6) மோட்டார் ஊர்தி வரி விண்ணப்பப்படிவம்(மோ. ஊ. 06)

7) மோட்டார் ஊர்தி வரி அட்டை நகலுக்கான விண்ணப்பப்படிவம் (மோ. ஊ. 07)

8) மோட்டார் ஊர்தி மாற்றிக்கொடுப்பதற்கான விண்ணப்பப்படிவம்(மோ. ஊ. 08)

9) மோட்டார்ஊர்தி கொள்வனவின் பின் தமிழீழ பதிவதற்கான விண்ணப்பப் படிவம் (மோ.ஊ 09)

10) மோட்டார் ஊர்தி பதிவுகளை நீக்குவதற்கானவிண்ணப்பப்படிவம் (மோ. ஊ. 10)

11) தமிழீழ மோட்டார் ஊர்தி வருடாந்தவரி பணவரவுச் சான்றிதழ் (மோ. ஊ. 11)

12) தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் பணவரவுச் சான்றிதழ்(மோ.ஊ. 12)

13) இயந்திரம்/அடிச்சட்டம் வைத்திருப்பதற்கான தமிழீழ அனுமதிப் பத்திரம் (மோ.ஊ. 13)

14) தமிழீழ மோட்டார் ஊர்திப் பரிசோதகரின்உறுதிச் சான்றிதழ் (மோ.ஊ. 14)

# பாகிஸ்தானில் தேர்தல்கள் ஜூலையில் நடைபெறும்

## இடைக்காலப் பிரதமராக மசாரி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பிரதமர் நவாஸ் ஷெரீப் அரசாங்கம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்நாட்டின் தற்காலிக பிரதமராக பாகிஸ்தான் முஸ்லிம் லீக் ஜூனைஜோ பிரிவு கட்சியைச் சேர்ந்த மசாரி(70) பதவிப்பிரமாணம் செய்துள்ளார். மற்றும் தற்காலிக அமைச்சரவையும் பதவி ஏற்றுள்ளது.

மசாரியின் இடைக்கால அரசில் ஜனாதிபதிக்கு விசுவாசமானவர்களும் திருமதி. பெனாசிர் பூட்டோவின் ஆதரவாளர்களுமே இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானில் பொதுத் தேர்தல்கள் ஜூலை 14ஆம் திகதி நடைபெறும் எனபாகிஸ்தான் ஜனாதிபதி இசாக்கான் அறிவித்துள்ளார். இந்த ஆட்சி கலைப்பிற்கும், பாகிஸ்தான் இராணுவத்திற்கும் தொடர்பு இல்லை என அந்நாட்டின் இராணுவத்தளபதி அறிவித்துள்ளார்.

அரசாங்கம் கலைக்கப்பட்டதையடுத்து நாட்டின் கேந்திர இடங்களிலும் வானொலி, தொலைக்காட்சி கட்டடங்களிலும், பாதுகாப்புப்படைகள் சேவையி லீடுபடுத்தப்பட்டுள்ளன,

இதேசமயம் தமது அரசாங்கம் பதவி கவிழ்க்கப்பட்டதை எதிர்த்து தாம் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார். இதே வகையில் 1990இல் பதவி இழந்த திருமதி பெனாசிர் பூட்டோ இம்முறை ஜனாதிபதி எடுத்த முடிவை வரவேற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஐ. நா. ஹெலிகள் மீட்புப் பணியில் தீவிரம்

(சரஜேவோ)

சேர்பியரின் முற்றுகையினுள் உள்ள பொஸ்னிய செபரனிகா நகரிலிருந்து கடும் காயமுற்ற, சுகவீனமுற்ற 133 முஸ்லிம்கள் ஐ. நா. ஹெலிகப்டர்கள் மூலம் மீட்கப்பட்டுள்ளனர். மீட்புப்பணி தொடர்ந்து நடைபெறுகின்றது.

சேர்பிய இராணுவ தளபதிக்கும், பொஸ்னிய முஸ்லிம் தரப்பு இராணுவ தளபதிக்கும் இடையில் ஐ. நா. வின் முயற்சியினால் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையடுத்தே இந்த மீட்புப் பணியை ஐ. நா. மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. தற்போது செபரனிகா நகர் ஐ. நா. பராமரிப்பில் உள்ளது.

# பாக். அரசாங்கம் கலைப்பு பின்னணியில் நடந்தது

நேற்று முன்தினம் பாகிஸ்தான் மக்கள் காலையில் எழுந்தபோதே அன்று இரவிற்குள் அரசியலில் ஏதோ ஒன்று நடைபெறப்போவதாக மனதினுள் உணர்ந்து கொண்டனர். முதல் நாள் மாலையில்தான் பிரதமர் நவாஷ் ஷெரீப் வானொலி தொலைக்காட்சிமூலமான தனது உணர்ச்சிகரமான உரையில் பாகிஸ்தான் ஜனாதிபதியின் பெயரைக் குறிப்பிடாமலேயே அவர் மீது பல குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டு போனார்.

இரண்டரை மாதகாலம் வெளிநாட்டிலிருந்த எதிர்க் கட்சித் தலைவி திருமதி பெனாசீர் பூட்டோ இருதினங்களுக்கு முன்னர் தான் இஸ்லாமாபாத் திரும்பி தமது கட்சியினருடன் அவசர கூட்டம் ஒன்றை நடத்தினார். ஷெரீப் அரசு கலைக்கப்படுவதற்கு முதல் நாள் இரவு ஜனாதிபதி இசாக்கான் ஷெரீப்பிற்கு எதிராக பிரசாரங்கள் செய்வதில் முன்னணி வகித்த பெனாசீர் பூட்டோவுடனும், முன்னாள் இடைக்கால பிரதமருடனும் பேச்சு நடத்தினார்.

நேற்று முன் தினம் இரவு 9 மணியளவில் ஜனாதிபதி மாளிகையில் செய்தியாளர் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளதாக திடீரென அறிவிக்கப்பட்டது. செய்தியாளர்கள் கூடினர் செய்தியாளர் மாநாட்டில் ஆட்சி அதிகாரப் போட்டியில் பிரதமர் நாவாஷ் ஷெரீப் தோற்றுப்போய் விட்டார் என்பது தெரிந்தது.

அச் செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதி கான் பிரதமர் ஷெரீப் அரசாங்கம்மீதான குற்றச்சாட்டுகளை அடுக்கினார் தொடர்ந்து அவரிடம் செய்தியாளர்கள் கேள்விகள் கேட்க முயன்றபோது பதில் ஏதும்கொடுக்காது அங்கிருந்து வெளியேறினார் ஜானாதிபதி இசாக்கான்.

தொடர்ந்து அவரின் இரண்டாவது ஆச்சரியமான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசியலில் பிரபலம் இல்லாத மசாரி என்பவரை இடைக்கால பிரதமராக பதவி பிரமாணம் செய்வித்தார். இது நடந்து சிறிது நேரத்தில் பொதுத்தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டது. ஒரு மாதம் நடைபெற்ற பெரும் அரசியல் அமர்க்களத்தின் பின் இனி தேர்தல் பிரசார அமர்க்களங்கள் பாகிஸ்தானில் மேடையேறவுள்ளன.

ஈழநாதம்

# உலக மாற்றத்திற்கேற்ப அறிவியல் வளர்ச்சி தேவை

## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

மாணவர்களுடைய வளர்ச்சி எமது மக்களினுடைய வளர்ச்சி. நிச்சயமாக எமது இலக்கின் வளர்ச்சியை, வெற்றியை இவ்வளர்ச்சி ஈட்டித்தரும். ஆகவே மாணவர்கள் தொடர்ந்தும் வெற்றிபெற எந்தத் தடைகள், இடர்பாடுகள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு எமது இனத்தின் மிகப்பெரிய சொத்தாகிய கல்வியை வளர்த்தெடுக்கவேண்டும். இவ்வாறுநேற்று அன்னை பூபதி கலையரங்கில் நடைபெற்ற அன்னை பூபதி பொது அறிவுப்போட்டி பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

எமது சந்ததி உலகமாற்றத்திற்கேற்ப அறிவியல் வளர்ந்த ஒரு சந்ததியாக உருவாக வேண்டும். இவ்வளர்ச்சிதான் எமது எதிர்கால வெற்றியைத் தரப்போகின்றது. இன்றுஎமது இனத்தைப் பொறுத்தவரை நாம் பல கஷ்டத்தின் மத்தியிலே எல்லாத் துறைகளையும் வளர்த்தெடுக்கவேண்டிய சூழ்நிலையிலே இருக்கின்றோம். இவற்றுள் மிகமுக்கியமானது கல்வி. கல்வியின் வளர்ச்சியை ஊக்குவிக்க - மாணவர்களை அறிவாற்றல் உள்ளவர்களாக வளர்த்தெடுக்க எமது தலைவரினாலும், எமது அமைப்பினாலும் பலதிட்டங்கள், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அந்த அடிப்படையிலேதான் அன்னை பூபதி அம்மா நினைவு அறிவுப் போட்டி நடாத்தப்படுகிறது.

இப் பொது அறிவுப்போட்டியில் எமது மாணவர்கள் தங்களது ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிக்காட்டியுள்ளார்கள். அவர்களுடைய இந்தத் திறமைகளெல்லாம் நிச்சயமாகத் தொடர்ந்தும் ஊக்குவிக்கப்படும். எமது இயக்கத்தின் சார்பில் எமது மாணவ சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்கு நாம் என்றென்றும் உறுதுணையாக நிற்போமென்றார்.

கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் உரையாற்றுகையில்;

கிராமப்புறப் பாடசாலை மாணவர்களே அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுப் போட்டியில் கூடுதலான அளவு பங்குபற்றி சிறப்பாகச் சித்தியும் எய்தியுள்ளார்கள். முன்னணிப் பாடசாலை மாணவர்களும், நகர்ப்புற, பட்டணப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் கூடியளவில் ஏனோ இப்போட்டியில் பங்குபற்ற முன்வரவில்லை. இனி வரும் காலத்திலாவது இவர்களை இப்போட்டிகளில் பங்குபற்றவைக்க அதிபர்கள். ஆசிரியர்கள், பெற்றோர்கள் முன்வரவேண்டும் என்றார்.

இவ்விழாவில் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் சிறப்புரையாற்றுகையில்;

நாம் எல்லோரும் அறப்போராட்டத்தில் ஈடுபட்டுஎல்லோரும் வாழவழி செய்யவேண்டும்.

நாம்எல்லோரும்வாழவேண்டுமானால் நாம் மற்றவருடன் பேசிப்பழகவேண்டும். நாம் மற்றவர்களுடன் பேசிப்பழகுவதானால் கணிதத்திலோ அன்றி விஞ்ஞானத்திலோ பேசமுடியாது. பொது அறிவைப் பெற்றிருந்தாலே பேசிப் பழகமுடியும். ஆகவே எல்லோருக்கும் பொது அறிவு என்பது இன்றியமையாதது. ஆகவே நாங்கள் பொது அறிவுக் கல்விக்கு முக்கியத்துவம்கொடுக்க வேண்டும் என்றார். (சி)(பா)

### பொது அறிவின்றி

நின்றுவிட்டால் வாழ்வின் முழுமையை நாம் தரிசித்துக் கொள்ளமுடியாது. முழுமையான சமூக மனிதர்களாக வாழமுடியாது. அன்றாட வாழ்விற்கும் தேவைகளுக்கும் பயன்படும் வகையில், நாட்டின் நடப்பியல்புகளையும் உலகத்தின் போக்குகளையும் புரிந்து கொள்ளும் வகையில் நாம் எமது பொது அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம். அதுவே எம்மை சமூகத்திற்கு பயனுள்ள மனிதர்களாக ஆக்கிவிடுகிறது.

இன்று, எத்தனையோ நெருக்கடிகள், இடர்பாடுகள் மத்தியில் எமது மாணவ சமூகம் கல்வியைப் பயின்று வருகின்றது. இம்மாணவர்களுக்கு பொது அறிவில் ஆர்வத்தையும், ஊக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்கத்தோடு விடுத

வகையில் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியிருப்பதும் பாராட்டத்தக்கவிடயமாகும்.

அந்நியனால் எமது தேசம் ஆக்கிரமிக்கப்பட்ட மிக நெருக்கடியான கால கட்டத்தில், எமது விடுதலைப் போராட்டத்தை வீறுபெறச் செய்த தற்கொடையாளி அன்னை பூபதியின் நினைவாக பொது அறிவுத் தேர்வை ஆண்டுதோறும் நடத்திவரும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, அந்தத் தாயின் நினைவு நாளில், அந்த அன்னையின் பேரில் அமைந்த கலையரங்கத்தில், சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களைக் கௌரவிப்பது சாலப் பொருத்தமானதாகும்.

தமிழீழ மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக விடுதலைப் புலிகளின் மாணவர்

### ஆய்வுகூடப்

யாழ்ப்பாணக் கல்வித்திணைக்

### அன்னை

விடுதலைப் புலிகள் அரசியல் துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த திரு. அரசண்ணா, திரு. தங்கன் மற்றும் ஆதிலட்சுமி இராசையா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இவ் அஞ்சலி உரைகளைத் தொடர்ந்து' தியாகச் சுடர்'' வில்லிசை, ''தியாக தீபம்'' எனும் நாட்டிய நாடகம், ''அன்னையிட்ட தீ'' கவியரங்கு மற்றும் யாழ். பல்கலைக்கழக கலைஞர்களின் 'விடியலைத் தேடும் பறவைகள்' இசை நிகழ்ச்சி ஆகிய நிகழ்வுகள் இடம் பெற்றன

#### வடமராட்சியில்:

வடமராட்சியில் அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினமான நேற்று மாலிச்சந்தி விநாயகர் ஆலய முன்றலில் உண்ணாவிரதம் நடைபெற்றது காலை 8 மணியளவில் உண்ணாவிரதம் ஆரம்பமானது. உண்ணாவிரதத்தை, தேசிய கீதம் இசைக்க அரசியல்துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த திரு. அரசண்ணா தேசியக் கொடியை ஏற்றிவைத்து ஆரம்பித்து வைத்தார்.

அன்னை பூபதியின் திரு உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்த வடமராட்சி மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி மலையரசி ஈகைச்சுடரையும் ஏற்றிவைத்தார். ஆயிரக்கணக்கானோர் நேற்றைய உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டிருந்தனர். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், பொது மக்கள், வர்த்தகர்கள் மற்றும் நிறுவனங்கள், அரச உத்தியோகத்தர்கள் பலரும் கலந்திருந்தனர்.

உண்ணாவிரதத்தின் போது ஆனையிறவில் நடந்த யுத்த நடவடிக்கை எடுத்துக்காட்டப்பட்டன. மற்றும் அன்னை பூபதி, கிட்டு அவர்களின் வீரச்சாவு நிகழ்வுகளும் காண்பிக்கப்பட்டதோடு. விடுதலைப் புலிகள் அரசியல்துறையினரால் அன்னை பூபதி பற்றிய உரைகளும் நிகழ்த்தப்பட்டன.

அன்னை பூபதியின் உருவப் படம் வைக்கப்பட்ட ஊர்தி ஒன்று வல்வெட்டியில் இருந்து பவனியாக எடுத்து வரப்பட்டது மாலை 5 மணிவரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது. தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் கூட்டமும் இடம் பெற்றன.

#### தென்மராட்சியில்:

தென்மராட்சியில் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள் கொடிகாமம் நாவலடி அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு கந்

### தொப்பிகலவில் இராணுவ நடவடிக்கை

தொப்பிகல காட்டுப் பகுதியிலிருந்து புலிகளை முற்றாக விரட்டும் வரையில் அங்கு இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்று கூட்டுப் படைத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

### சிறப்புப்

திரு. இன்பன் தலைமையில் ஆரம்பமாகிய பரிசளிப்பு விழாவில் மேற்படி தேர்வில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களுக்காக தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரனினால் வழங்கப்பட்ட ஆசிச் செய்தியினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு தமிழ்ச் செல்வன் வாசித்து சிறப்புரையாற்றினார். தொடர்ந்து இராசுந்தரலிங்கம் பிரான்சிஸ் யோசப் அடிகளார். ம. மகேந்திரம் மகேசன் பேராசிரியர் அ சண்முகதாஸ் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

தேசிய மட்டத்தில் முதலாம் இரண்டாம், மூன்றாம் பரிசில்களைப் பெறுவோரிற்கு முறையே தங்கம் வெள்ளி, வெண்கலம் பதக்கங்களும், சான்றிதழ்களும், கோட்ட மட்டத்தில் பரிசில்களைப் பெறுவோரிற்கு சிறப்புப்பரிசில்களையும் சான்றிதழ்களையும் தமிழ்ச்செல்வன், இரா.சுந்தரலிங்கம், பிரான்சிஸ் யோசப் அடிகளார் மற்றும் சிறப்பு விருந்தினர்களும் வழங்கி கௌரவித்தனர்.


இறுதியாக நன்றியுரையைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடி இறக்கலுடன் விழா இனிது நிறைவெய்தியது. [பா] [சி]

### கடற்படை

ஈடுபட்டிருந்தவேளை திடீரென எதிர்ப்பட்ட கடற்படையினர் இவர்கள் மீது பலத்த துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டனர். துப்பாக்கி வேட்டுக்கள் ஒரு படகைத் துளைத்துக் கொண்டு சென்று மீனவர் ஒருவரின் காலையும் பதம் பார்த்தது.

முனையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சவரிமுத்து லூர்த்து மரியநாயகம் (வயது 40) என்பவரே காலில் படுகாயமடைந்து பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவருடன் கூடச்சென்ற அதே இடத்தைச் சேர்ந்த சிவநேசன் (வயது 20) இராசையா (வயது 40 ஆகிய இருவருமே கடற்படையினரின் பலத்த தாக்குதலுக்கு இலக்காகினர். அதே சமயம் மாலை 5 மணியளவில் பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் சில தொண்டமா



அன்னை பூபதி நினைவாக நடைபெற்ற பொது அறிவுத் தேர்வில் தேசியமட்டத்தில் ஆண்டு –7 இல் முதலாமிடத்தைப் பெற்ற செஞ்சோலை மகளிர் பாடசாலை மாணவி சஞ்சிகா கந்தையா தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனிடமிருந்து பரிசினைப் பெற்றுக் கொள்வதையும், அருகில் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரனையும் காணலாம்.

### கலைவிழா

[யாழ்ப்பாணம]

கோப்பாய் நாவலடி சன சமூக நிலைய வளர்ச்சிக்காக மாபெரும் கலைவிழா நாளை காலை 7 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் நிகழ்ச்சிகளாக நகைச்சுவைக் கதம்பமும், களத்தில் காத்தான் (சிந்துநடைக் கூத்து) கூத்தும் கராத்தே கண்காட்சியும், ராஜன்ஸ் இசைக்குழுவின் தேனிசை வார்ப்பும்நடைபெறவுள்ளன.

### வீதி திருத்தம்

[தொல்புரம்]

வீரத்தாய் அன்னை பூபதி நினைவு நாளையிட்டு சங்கானை, சுழிபுரம் பிரதான வீதி திருத்தப்பட்டு வருகிறது.

இத்திருத்தப் பணி பொது ஸ்தாபனங்களின் பங்களிப்புடனும், உதவியுடனும் சுழிபுரம் சந்தியிலிருந்து சங்கானை ஏழாம் கட்டை வரை நடைபெற்று வருவதாக சங்கானை வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். [41]

### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

நின்றுவிட்டால் வாழ்வின் முழுமையை நாம் தரிசித்துக் கொள்ளமுடியாது. முழுமையான சமூக மனிதர்களாக வாழ முடியாது. அன்றாட வாழ்விற்கும் தேவைகளுக்கும் பயன்படும் வகையில், நாட்டின் நடப்பியல்புகளையும் உலகத்தின் போக்குகளையும் புரிந்து கொள்ளும் வகையில் நாம் எமது பொது அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம். அதுவே எம்மை சமூகத்திற்கு பயனுள்ள மனிதர்களாக ஆக்கிவிடுகிறது.

இன்று, எத்தனையோ நெருக்கடிகள், இடர்பாடுகள் மத்தியில் எமது மாணவ சமூகம் கல்வியைப் பயின்று வருகின்றது. இம்மாணவர்களுக்கு பொது அறிவில் ஆர்வத்தையும், ஊக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்கத்தோடு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடத்தப்படுகின்ற அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வானது மிகவும் ஆக்கபூர்வமான முயற்சி என நான் கருதுகிறேன்.

எமது மாணவர்கள் தமது பொது அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான பாடத்திட்டங்கள், கற்பித்தல்கள் இல்லாத நிலையிலும், பொது அறிவை தாமாகவே பெற்றுக் கொள்வதற்கான ஊடகங்கள் அருகிவிட்ட இன்றைய சூழ்நிலையிலும், 35 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் இம்முறை இந்தப் பொதுத் தேர்வில் தோற்றியிருப்பதும், பல மாணவர்கள் மிகச் சிறந்த வகையில் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியிருப்பதும் பாராட்டத்தக்க விடயமாகும்.

அந்நியனால் எமது தேசம் ஆக்கிரமிக்கப்பட்ட மிக நெருக்கடியான கால கட்டத்தில், எமது விடுதலைப் போராட்டத்தை வீறுபெறச் செய்த தற்கொடையாளி அன்னை பூபதியின் நினைவாக பொது அறிவுத் தேர்வை ஆண்டு தோறும் நடத்திவரும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, அந்தத் தாயின் நினைவு நாளில், அந்த அன்னையின் பேரில் அமைந்த கலையரங்கத்தில், சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களைக் கௌரவிப்பது சாலப் பொருத்தமானதாகும்.

தமிழீழ மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு மேற்கொண்டுவரும் இந்த நன்முயற்சி தொடர வேண்டும். இப் பொதுத் தேர்விலே பங்குகொண்ட அனைத்து மாணவர்களையும் பாராட்டுவதோடு, தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வியக்கத்தக்க முறையில் தனது திறனாற்றலை வெளிக்காட்டிய 4ஆம் ஆண்டு மாணவன் செல்வன் வி. கோகுலனின் ஆற்றலை மெச்சுகிறேன். கோகுலனுக்கு எனது சார்பில் சிறப்புப் பரிசை வழங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

சண்முகதாஸ் அவர்கள் சிறப்புரையாற்றுகையில்; நாம் எல்லோரும் அறப்போராட்டத்தில் ஈடுபட்டுஎல்லோரும் வாழ வழி செய்யவேண்டும். நாம்எல்லோரும்வாழவேண்டுமானால் நாம் மற்றவருடன் பேசிப்பழகவேண்டும். நாம் மற்றவர்களுடன் பேசிப்பழகுவதானால் கணிதத்திலோ அன்றி விஞ்ஞானத்திலோ பேசமுடியாது. பொது அறிவைப் பெற்றிருந்தாலே பேசிப் பழகமுடியும். ஆகவே எல்லோருக்கும் பொது அறிவு என்பது இன்றியமையாதது. ஆகவே நாங்கள் பொது அறிவுக் கல்விக்கு முக்கியத்துவம்கொடுக்க வேண்டும் என்றார். (சி)(பா)

### ஆய்வுகூடப்

யாழ்ப்பாணக் கல்வித்திணைக்களத்திலும், கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் பார்வையிடலாம்

### ஆண்டு 4

கல்லூரி நாலாம் ஆண்டு மாணவரான செல்வன் வி. கோகுலனுக்கு தமிழீழ தேசியத்தலைவர் திரு வே.பிரபாகரன் அவர்கள் சிறப்புப் பரிசாக ஐயாயிரம் ரூபா வழங்கி கௌரவித்துள்ளார்.

இம் மாணவன் பதக்கமும் மற்றும் சான்றிதழும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. [பா] [சி


# தொழினுட்பக் கல்லூரி
## இறுதிப் பரீட்சைகள் - 1992

கீழ்வரும் பயிற்சிநெறிகளுக்கான பரீட்சைகள் நேரே குறிப்பிட்ட திகதிகளில் ஆரம்பமாகும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். இப்பரீட்சைகளுக்கு விண்ணப்பித்தவர்கள் பரீட்சை ஆரம்பமாகும் திகதிக்கு முதல் நாள் (அலுவலக நாளில்) அவ்வப் பகுதித் தலைவர்களிடம் தமது மாணவர் பிரவேச அனுமதிச் சீட்டைச் சமர்ப்பித்து, பரீட்சைக்குரிய அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகிறேன்.

| பயிற்சிநெறி | | பரீட்சை ஆரம்பமாகும் திகதி |
|---|---|---|
| 1. ஆங்கில தேசிய தராதரப்பத்திரம் (N. C. E.) | — | 1993-04-26 |
| 2. ஆங்கில தேசிய தகுதித்தேர்வு (N. D. E.) | — | 1993-04-30 |
| 3. சுருக்கெழுத்தாளர்களுக்கான எழுத்துப் பரீட்சை (உயர்தரம் / கீழ் தரம் - ஆங்கிலம் / தமிழ்); தொழிற் கற்கைகளிலான தேசிய தாரதரப் பத்திரம் (N. C. B. S.); உயர் தேசிய கணக்கியல் தகுதித்தேர்வு (புதிய பாடத்திட்டம்) 2-ம் வருடம் (H. N. D. A. II; உயர் தேசிய வணிகத்தேர்வு 2 ம் வருடம் (H. N. D C. I); தேசிய தொழிற் கற்கைகளிலான தகுதித் தேர்வு (N. D. B. S.) | — | 1993-05-03 |

தொழினுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1993-04-18

அதிபர்

(சி-6466)


வீரச்சாவு நிகழ்வுகளும் காண்பிக்கப்பட்டதோடு. விடுதலைப் புலிகள் அரசியல்துறையினரால் அன்னை பூபதி பற்றிய உரைகளும் நிகழ்த்தப்பட்டன.

அன்னை பூபதியின் உருவப் படம் வைக்கப்பட்ட ஊர்தி ஒன்று வல்வெட்டியில் இருந்து பவனியாக எடுத்து வரப்பட்டது மாலை 5 மணிவரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது. தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் கூட்டமும் இடம் பெற்றன.

### தென்மராட்சியில்:

தென்மராட்சியில் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள் கொடிகாமம் நாவலடி அமெரிக்கன் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு கந்தண்ணா தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் முதலில் தென்மராட்சிக்கோட்ட தளபதி திரு. பரணி அவர்கள் ஈகைச் சுடரைஏற்றிஆரம்பித்து வைத்தார். இதைத் தொடர்ந்து கலைநிகழ்சிகளான கவியரங்கு ''அன்னை பூபதியின் அறைகூவல்'' என்னும் தலைப்பில் வில்லிசை,பட்டிமன்றம் 'தமிழீழத்துக்கு துரோகம் விளைவித்தது இலங்கை அரசா? இந்தியா அரசா?' என்பன இடம் பெற்றன. இதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர், திரு. இளம்பரிதி, கடல் புலிகள் திரு. மறவன். யாழ். மாவட்ட அரசியல் துறையைச் சேர்ந்த செல்வி தணிகைச் செல்வி சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. தமிழன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். பின்பு மாலை 5. 00 மணிக்கு அடையாள உண்ணாவிரதம் யாவும் நிறைவு பெற்றது. இந்நிகழ்வுக்கு பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

நேற்று இரவு அஞ்சலிக் கூட்டம் தென்மராட்சி மகளிர் படைப் பிரிவைச் சேர்ந்த செல்வி சுவைதாவின் தலைமையில் இடம் பெற்றது இதில் தமிழீழ அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் யாழ். மாவட்ட பிரசார பிரிவு பொறுப்பாளர் திரு. கலையரசன், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். பின்பு கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

### வன்னியில்:

தியாகி அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் நேற்று முன்தினம் பூநகரி செம்மண்குன்று, பூநகரி-நல்லூர், மன்னார்-பெரிய பண்டிவிரிச்சான் பகுதிகளில் எழுச்சிபூர்வமாக நடைபெற்

துப்பாக்கித் தாக்குதலை மேற் கொண்டனர். துப்பாக்கி வேட்டுக்கள் ஒரு படகைத் துளைத்துக் கொண்டு சென்று மீனவர் ஒருவரின் காலையும் பதம் பார்த்தது.

முனையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சவரிமுத்து லூர்த்து மரியநாயகம் (வயது 40) என்பவரே காலில் படுகாயமடைந்து பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவருடன் கூடச்சென்ற அதே இடத்தைச் சேர்ந்த சிவநேசன் (வயது 20) இராசையா (வயது 40 ஆகிய இருவருமே கடற்படையினரின் பலத்த தாக்குதலுக்கு இலக்காகினர். அதே சமயம் மாலை 5 மணியளவில் பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் சில தொண்டமானாறு அண்டிய பகுதிகளில் விழுந்து வெடித்தன. உலங்கு வானூர்தி ஒன்றும் அப்பகுதியை வட்டமிட்டு நோட்டமிட்டது. (யோ)

றன.

பூநகரி செம்மண்குன்று சனசமூக நிலையத்தில் அடையாள உண்ணாவிரதம் நேற்று முன்தினம் காலை 9. 25 மணியளவில் இரு நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகியது உண்ணாவிரத நிகழ்வின் போது பாடசாலை மாணவர்களின் கவியரங்கம், செம்மண்குன்று, பல்வாய், செழிவரை மக்கள் இணைந்து நடாத்திய இசை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் பூநகரிப் பிரதேசப் பொறுப்பாளர் மதன்ராஜ். பூநகரிப்பிரதேச மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி யாழிசை, கறுக்காய் தீவு அ. த. க. பாடசாலை ஆசிரியர் சிவநாதன் ஆகியோர் உரையாற்றினர். இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

பூநகரி-நல்லூரிலும் அன்னை பூபதி நினைவு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன

இதேவேளை நேற்று முன்தினம் பெரிய பண்டிவிரிச்சானில் புக்காரா குண்டு வீச்சு மத்தியிலும் அன்னை பூபதியின் உருவப்படம் தாங்கிய ஊர்தி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பெரிய பண்டிவிரிச்சானில் ஆரம்பமாகிய இந்த ஊர்தியில் வைக்கப்பட்டிருந்த அன்னை பூபதியின் உருவப் படத்திற்கு மக்கள் நிறைகுடங்கள் வைத்து விளக்கேற்றி மலரஞ்சலி செலுத்தினர். பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட இந்த ஊர்வலம் மடு திறந்த நிவாரண நிலையம், தச்சனா மருதமடு, பாலம்பிட்டி, சின்னப்பண்டிவிரிச்சானூடாகச் சென்றது.

(86),(யோ)

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் நாவலடி சனசமூக நிலைய வளர்ச்சிக்காக மாபெரும் கலைவிழா நாளை காலை 7 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் நிகழ்ச்சிகளாக நகைச்சுவைக் கதம்பமும், களத்தில் காத்தான் (சிந்துநடைக் கூத்து) கூத்தும் கராத்தே கண்காட்சியும், ராஜன்ஸ் இசைக்குழுவின் தேனிசை வார்ப்பும்நடைபெறவுள்ளன.

[தொல்புரம்]

வீரத்தாய் அன்னை பூபதி நினைவு நாளையிட்டு சங்கானை, சுழிபுரம் பிரதான வீதி திருத்தப்பட்டு வருகிறது.

இத்திருத்தப் பணி பொது ஸ்தாபனங்களின் பங்களிப்புடனும், உதவியுடனும் சுழிபுரம் சந்தியிலிருந்து சங்கானை ஏழாம் கட்டை வரை நடைபெற்று வருவதாக சங்கானை வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

[41]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 19-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9073

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

42-9325, 40-7207, 24-5460 24-5939. 24-6161, 26-8936, 22-8075, 26-3017, 22-2250, 24-1127, 24-7353, 40-1737, 40-6032, 24-3396, 22-8855.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

43-2524, 43-3576, 27-1927, 27-0802, 43-4065, 24-7225, 26-2135, 27-2034, 42-1750, 26-4951, 24-4350, 40-4429, 42-1320, 22-5622, 42-9530, 42-7975, 24-9744, 27-7756, 27-8164, 43-4045, 27-1939, 24-0416, 42-3945.


## மரண அறிவித்தல்
## திரு. செல்லப்பா சதாசிவம்

[ஓய்வுபெற்ற புள்ளிவிபர உத்தியோகஸ்தர்]

காரைநகர் களபூமி சத்திரந்தையை பிறப்பிடமாகவும், அராலி மேற்கு வட்டுக்கோட்டையை தற்போது வசிப்பிடமாக கொண்டவருமான செல்லப்பா சதாசிவம் 19-4-93 திங்கட்கிழமை வவுனியாவில் காலமானார். இவர் இந்திராணியின் அன்புக் கணவரும், வசந்தகுமாரி மகேஸ்வரி, கமலகுமாரி, சிவபுத்திரன் [பொறியியலாளர்] கணேசன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சு. மகாலிங்கத்தின் [லங்கா ஸ்ரோஸ், வவுனியா] அன்பு மாமனாரும், துவாரகன், அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (20-4-93) காலை 10-00 மணிக்கு வவுனியாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
பிள்ளைகள்

சித்தப்பா வீதி,
அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை

(4720)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.